08.08.2023 வா.சா.1 சீவலமுத்து சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டது (ஒ.எஸ்.எண். 14 /2016)

நீங்கள் என்ன படித்துள்ளீர்கள் என்றால் பிஎஸ்.சி.சுவாலஜி படித்துள்ளேன். உங்களுக்கு வயது என்னவென்றால் 32 வயது. தாவாச்சொத்தின் பரப்பளவு எவ்வளவு என்றால் 1 ஏக்கர் 13 செண்டு. அதன் சர்வே எண்.என்னஎன்றால் 163/4. உங்கள் தாயார் தாக்கல் செய்த பிராதை நீங்கள் படித்துப்பார்த்தீர்கள் என்றால் சரிதான். உங்கள் தாயார் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை படித்துபார்த்தீர்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 வழக்கறிஞர் அறிவிப்பு எந்த சர்வே எண்ணில் உள்ள சொத்திற்காக அனுப்பப்பட்டது என்றால் சர்வே எண்.163/1. ஷை சர்வே எண்.163/1 ன் வடக்கு பகுதி பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஷை வா.சா.ஆ.5 அறிவிப்பை மறுத்து பிரதிவாதிகள் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றாலும் அதை நீங்கள் படித்துள்ளீர்கள் என்றால் சரிதான். சர்வே எண்.163/1 என வா.சா.ஆ.5 அறிவிப்பில் உள்ளதை மறுத்து கூடுதலாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினீர்களா என்றால் அனுப்பினோம். அந்த அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் செய்துள்ளேன்.

2) தாவா வழக்கின் பிராதில் சொத்தின் நான்கு மால்களை சொல்லவில்லை என்றால் சரிதான். நீங்கள் பிறந்தது முதல் உள்ளீரில் தான் குடியிருந்து வருகிறீர்கள் என்றால் வெளியூரில் தங்கி படித்தேன். உங்கள் பெற்றோர் வெளியூர் எதுவும் செல்லவில்லை என்றாலும் உள்ளீரில் தான் இருந்தார்கள் என்ாறல் வேலைக்கு வெளியூர் சென்றார்கள். 07.01.2013 முதல் வேலை நிமித்தமாக சென்னை சென்றார்கள். யார் யார் போனார்கள் என்றால் அம்மா,அப்பா போனார்கள். சென்னையில் என்னவேலை பார்த்தார்கள் என்றால் கூலி வேலைபார்த்தார்கள். எங்கு அவர்கள் தங்கியிருந்தார்கள் என்றால் கிண்டி அருகில் தங்கியிருந்தார்கள். அந்த காலகட்டத்தில் நீங்கள் உள்ளுருக்கு வந்தீர்களா என்றால் இல்லை உங்கள் நிலங்கள் தரிசதாக கிடைந்தா என்றால் ஆம். தாவாச்சொத்திற்கு வடக்கு பக்கம் உள்ள வீடுகள் குடியிருப்பு வீடுகள் என்றால் சரிதான். அதில் தான் பிரதிவாதிகள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த வீடுகளுக்கு மின் இணைப்பு பெற்று 20 வருடங்களுக்குமேல் இருக்கும் என்றால் 10 வருடங்களுக்கு மேல் இருக்கும். அந்த வீட்டிற்கு பஞ்சாயத்தில் 20 வருடங்களாக தீர்வை கட்டி வருகிறார்கள் என்றால் தெரியாது.,

3) தாவா வழக்கு தாக்கல் செய்த பின்பாக பஞ்சாயத்தில் தீர்வை செலுத்தியது சம்பந்தமாக நீங்கள் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு விசாரிக்காததற்கு தனிப்பட்ட காரணங்கள் உண்டா என்றால் பஞ்சாயத்தில் கேட்டேன் அவர்கள் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்லி விட்டார்கள். நீங்கள் பஞ்சாயத்தில் கேட்கும் போது கதவு எண்.1/4 மாசணமுத்து என்பவருடையது என்று சொன்னார்கள் என்றால் சரிதான். அதற்கு மேற்கு பக்கம் கதவு எண்.1/32 அருணாச்சலம் என்பவருடையது என்று சொன்னார்கள் என்றால் சரிதான். அதற்கும் மேல் பக்கம் கதவு எண்.1/33 கருப்பசாமி, கன்னியம்மாள் ஆகியோர்களுடையது என்று சொன்னார்கள் என்றால் சரிதான். ஷை 3 வீடுகள் ஓட்டுவீடுகள் என்றால்சரிதான. ஷை 3 வீடுகளுக்கும் மேற்கு பக்கம் அருணாசலம் மகன் செல்லப்பாண்டி என்பவருடைய கதவு எண்.1/5 என்ற கான்கிரிட் வீடு உள்ளது என்றால் சரிதான்.

4) அதற்கு மேற்கு பக்கம் கதவு எண்.1/37,1/5 ஏ என்ற இஸ்ரவேல்என்பவரின் வீடு உள்ளது என்றால் சரிதான். ஷை வீடுகள் செங்கல் கட்டுமான வீடுகள் என்றால் சரிதான். அந்த வீட்டின் தீர்வை மற்றும் மின் இணைப்பு பெற்ற ஆவணங்களை பார்த்தால் ஷை வீடுகள் கட்டப்பட்ட வருடம் தெரியவரும் என்றால் சரிதான். சர்வே எண்.163/1 க்கு வடக்கு பக்கம் சுடமாடசாமி கோவில் உள்ளது என்றால் சரிதான். கிழக்குபக்கம் பீர்மைதீன் என்பவருடைய இடமும், மேற்கு பக்கம் புறம்போக்கு இடம்உள்ளது என்றாலும், தெற்கு பக்கம் இசக்கி மகன் கருப்பசாமி என்பவருடைய புஞ்சை உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.163/4 ன் நடுப்பகுதியில் பொதுக்கிணறு உள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.163/3 ல் தான் கிணறு உள்ளது. சர்வே எண்.163/3 ஐ சுற்றி சர்வே எண்.163/4 ல் உள்ள நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகளின் வீடுகள் சர்வே எண்.163/4 ன் வடமேற்கு பகுதியில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.163/4 ற்கு வடக்கு பக்கம் சுப்பையா என்பவரின் மனைவி அன்னம்மாளின் புஞ்சையும் சுப்பையாவின் கல்லறையும்உள்ளது என்றால் சரிதான்.

5) சர்வே எண்.163/4 ன் கிழக்கு பக்கம் சரவணக்குமாரின் தோட்டம் உள்ளது என்றால் தோட்டம் உள்ளது ஆனால் யாருடைய தோட்டம் என்று தெரியாது. சர்வே எண்.163/4 ன் தெற்கு பக்கம் தோட்டம் உள்ளது என்றால் சரிதான். யாருடைய பெயரில் உள்ளது என்றால் சர்வே எண்.163/5 என்ற எனது தாயார் கொம்புமாடத்தி பெயரில்

உள்ளது. சர்வே எண்.163/1 மற்றும்சர்வே எண்.163/4 ன் நான்குமால்கள் உங்களுக்கு பிறந்தது முதல் தெரியும் என்றாலும் உங்கள் தாயாருக்கு கிரையம்வாங்கியது முதல் தெரியும் என்றால் எனக்கு பிறந்தது தெரியுமா என்று தெரியாது, எனது தாயாருக்கு தெரியுமா என்றும் எனக்குத்தெரியாது. உங்கள் தாயாருக்கு விற்றநபர் சர்வே எண்.163/4 ல் கையிருப்பு நிலம் வைத்துக்கொண்டு தான் விற்றார் என்றால் இல்லை. வா.சா.ஆ.3 ஆவணத்தில் சர்வே எண்.163/4 ல் 0.26.5–க்கு செண்டு 66 ல் மேல்பக்கம் செண்டு 4 போக மீதி செண்டு 62 கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6) உங்கள் தாயார் கிரையம் வாங்கிய வா.சா.ஆ.1 ஆவணத்தை படித்துப்பார்த்தீர்களா என்றால் படித்துப்பாத்தேன். அதில் சர்வே எண்.163/1,163/4 ஆகிய இரண்டு சர்வே எண்கள் கிரையச்சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.163/4 ல் உள்ள முழுசொத்தும் கிரையம் வாங்கப்பட்டதா என்றால் இல்லை. தேனம்மாள் கையிருப்பு நிலம் மீதி நிலம் விற்கப்பட்டுள்ளது. தேனம்மாளின் கையிருப்பு நிலத்தை சேர்த்து தான் நீங்கள் இந்த வழக்கில் கட்சிசெய்து வருகிறீர்கள் என்றால் இல்லை. நீங்கள் இந்த வழக்கில் கட்சி செய்து வருவது 88 செண்டா அல்லது 66 செண்டா என்றால் சர்வே எண்.163/4 ல் 62 செண்டும், சர்வே எண்.163/5 ல் 88 செண்டு எங்களுடையது என்று கட்சி செய்கிறேன். நீங்கள் சொல்லும் சர்வே எண்.163/4 ல் உள்ள 62 செண்டு என்பது தேனம்மாளின் கையிருப்பு நிலம் போக உள்ள நிலம் என்று சொன்னால் சரிதான். தேனம்மாளின் கையிருப்பு நிலம் என்ன ஆனது யாருக்கு கிரையம் கொடுத்தார் என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். ஷை விபரத்தை வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

7) தற்போது உங்கள் அனுபவத்தில் உள்ள இடம் எத்தனை செண்டு உள்ளது என்று அளந்து பார்க்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் குடியிருக்கும் இடம் தேனம்மாளின் கையிருப்பு இடத்தில் வருகிறது என்றால் இல்லை. எங்களுடைய நிலத்தில் வருகிறது. சர்வே எண்.163/4 ல் மேற்கு மால் என்பது இராஜாபுதுக்குடி ஊர் மற்றும் தெரு என்றால் சரிதான். அவை நத்தம் வகையை சார்ந்தது என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கிரைய ஆவணங்களை பார்க்கையில் உங்கள் இடத்திற்கும், ஊர் நத்தத்திற்கும் இடையில் தான் தேனம்மாளின் கையிருப்பு நிலம் உள்ளது என்றால் சரியல்ல வடமேற்கு பகுதியில் உள்ளது. பிரதிவாதிகளின்

வீடும் சர்வே எண்.163/4 ல் வடமேற்கு பகுதியில் தான் உள்ளது என்றால் சரிதான். தேனம்மாளின் மாமனார் பெயர் ஊர்காவலன் நாடார் என்றால் ஊர்காவலன் நாடார் என்று எனக்கு தெரியும் ஆனால் அவரின் மாமனார் என்று எனக்குத்தெரியாது. தேனம்மாளின் கணவர் பெயர் மாரியப்ப நாடார் என்றால் சரிதான். உங்கள் தாயார் கிரையம் பெறுவதற்கு முன்பு தேனம்மாளின் கையிருப்பு நிலம் பற்றி விசாரிக்கவில்லை என்றால் சரிதான். 2 வது தபசில் சொத்தில் உள்ள வீடுகளுக்கான தீர்வை, மின்இணைப்பு ஆவணங்களை பற்றி விசாரித்தீர்கள் என்றாலும் அதில் ஷை வீடுகள் 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டுள்ளது தெரியவந்ததால் அதை மறைத்து தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரம் உங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தேனம்மாளின் வாரீசுகளை கட்சி சேர்க்கவில்லை என்றால் அவருக்கு வாரீசுகள் கிடையாது. 2 வது தபசில் உள்ள சொத்துக்களின் மதிப்பை நீங்கள் சொல்லவில்லை என்றால் சரிதான். 2 வது தபசில் சொத்தில் உள்ள கட்டிடங்கள் 07.11.2013 முதல் 08.06.2014 கால கட்டத்தில் கட்டப்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. 2 வது தபசில் சொத்தில் உள்ள வீடுகள் மண் சுவர் வீடுகள் இல்லை என்றால் சரிதான்.,உங்கள் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)எம்.கடற்கரைசெல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
08.08.2023.